# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 164/நகராட்சி/2018**

**நாள் : 23/10/2018**

**திரு M. ஆறுமுகநயினார்,**
**மைலாப்பூர், சென்னை – 600 004. – முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பத்மனாபபுரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்**

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக முறையீடு செய்யப்பட்ட 20.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 164/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக பத்மனாபபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் முறையீட்டு நிறுவன அலுவலரின் விசாரணை வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக தாக்கல் செய்த முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்த புள்ளி செய்தியினை ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தமைக்காக ரூ. 20,104/– வழங்கக் கோரி 25.02.2016 நாளிட்ட பற்றுச் சீட்டு (Invoice) அனுப்பப்பட்டதென்றும், 2 ஆண்டுகள் ஆகியும் அத்தொகை நகராட்சியால் வழங்கப்படாமலேயே உள்ளது என்று தெரிவித்து உரிய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட தொகையில், ரூபாய் 402/– வருமானவரி பிடித்தம் செய்து, மீதித் தொகை ரூ.19,702/– 07.08.2018 நாளிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண்.377774–இன் மூலம் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுவிட்டதாக பத்மனாபபுரம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட தொகையினை முறையீட்டு நிறுவனம் பெற்றுக்கொண்டதை அந்நிறுவனம் சார்பாக 15.10.2018 அன்று விசாரணைக்கு வருகை தந்த அந்நிறுவன அலுவலர் திரு கே. சிவராமன் விசாரணையின் போது உறுதி செய்ததுடன், இரண்டு ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த பட்டியல் தொகையினை பெற்றுத் தர இம்முறைமன்ற நடுவம் மேற்கொண்ட நடவடிக்கைக்கும் தன் நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **23** –ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு M. ஆறுமுகநயினார்,
   கிரீன்வேய்ஸ் செய்தி மற்றும் விளம்பர நிறுவனம்,
   எண்.2, முதல்மாடி, வெங்கடேஸ்வரா அஹ்ரஹாரம் சாலை,
   மைலாப்பூர், சென்னை –4.

2. நகராட்சி ஆணையர்,
   பத்மனாபபுரம் நகராட்சி,
   பத்மனாபபுரம்.
   கன்னியாகுமரி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி